
# மன்னா

**CSI தமிழ் திருச்சபை அலைன்**




ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்;
அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும

பொழிவு 13 பிப்ரவரி 2020 ஆகாரம் 02




| | | |
|---|---|---|
| 7th Feb<br>6:00 AM - 6:30AM | காலை ஆராதனை | ஆலைய வளாகம் |
| 7th Feb<br>6:30 –9:00PM | இன்ப சுற்றுலா (ராஸ் அல் கோர், சபீல் பார்க், துபாய் அருங்காட்சியகம்) | துபாய் |
| 14th Feb<br>7:00PM – 9:00PM | மாதாந்திர உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 14th Feb<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 21st Feb<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 22nd Feb<br>7:30PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் | ஆயர் இல்லம் |
| 28th Feb<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 28th Feb<br>11:30PM – 12:30AM | மாத இறுதி / புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

050 586 8173 / 056 441 1225 / 050 482 1006

## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அலைன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | *7:00 PM* | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | *6:30 PM* | Men's Fellowship / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *7:00 PM* | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *6:30 PM* | Women's Fellowship / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Friday's / வெள்ளிகிழமை | *6:15 PM* | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | *11:00AM* | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | *7:00 PM* | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | *7:30 PM* | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | *7:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | *11:30PM* | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |

"For God so loVed the world
That He gAve
His onLy
BegottEn
SoN
That whosoever
Believes In Him
Shall Not perish,
But have Everlasting life."






## உள்ளே வாசிக்க..

ஆயர் மடல்
செயலரிடமிருந்து
திருமறை தியானப்பகுதி
வேதாகம களஞ்சியம்
மிஷனரி சுயசரிதை
கட்டுரைகள்
Youth Special
பாடல் பிறந்த கதை
Children's Corner
வேத வினாவிடை போட்டி
பிறந்த/திருமண நாள்
தெரிந்து கொள்வோம்
வேத வாசிப்பு

# The **Gospel** is the ultimate **Valentine** that should **not be** kept a secret!

# ஆயர் மடல்...

அன்புக்குரியவர்களே,


இயேசுவுக்குள் நித்தியமாய் நிலைத்திருந்து, ஆனந்தமயமான விசுவாச வாழ்க்கை வாழ்பவர்களே! உங்களுக்குள் கிறிஸ்து ஜீவித்துக் கொண்டிருக்கிறார் என்ற தைரியத்தோடு வாழுங்கள். இயேசுவின் பிரசன்னம் உங்களுக்குள்ளிருந்து வல்லமையாய் வெளிப்பட விரும்புகிறீர்களா? இயேசுவின் வார்த்தைகளில் நிலைத்திருக்க, கைக்கொள்ள பழகுங்கள், இயேசுவின் வல்லமை உங்களுக்குள்ளிருந்து வெளிப்படும். இந்த புதிய மாதத்தில் புதிய ஆவிக்குரிய அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்களாக.

சரீரப்பிரகாரமாக நம் சரீர ஆரோக்கியத்தை பற்றி கவலைப்பட்டு பரிசோதித்துப் பார்க்கிற நாம், ஆவிக்குறிய ஆரோக்கியமும், நம்முடைய விசுவாச ஆரோக்கியமும், நம்முடைய உள்ளான மனிதனுடைய ஆரோக்கியமும் எப்படிப்பட்ட நிலையிலிருக்கிறது என்று பரிசோதித்துப்பார்ப் 'பது மிகவும் பிரையோஜனமுள்ளதாயிருக்கும்! இயேசுவுக்குள் நிலைத்திருக்கிற நாம், நமது கிரியைகளில் அந்த சத்தியத்தை மறுதலிக்க என்ன காரணம்? நம்முடைய ஆவிக்குரிய அறியாமை, வசனத்தை முறைப்படி அறியாமலிருப்பதே முக்கிய காரணம். இதை உணர்ந்து இந்த புதிய மாதத்திலிருந்தாவது முறையாக வேத வசனங்களை வாசியுங்கள், அவ்வாறு வாசிக்க முடியவில்லையா? சோர்ந்து போகவேண்டாம்; Mobile phone லேயே Audio Bible'ஐ download செய்து, முறையாக கேளுங்கள், கேட்டுக்கொண்டே, தியானித்துக்கொண்டே மற்ற வேலைகளிலும் நீங்கள் ஈடுபடுங்கள். இந்த மாதத்தில் இந்த புதிய ஆவிக்குரிய முயற்சியில் வெற்றிபெறுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு உங்கள் ஆயர்,

Rev. M. Christopher Rajendran.




# Our Mission - Explained

The mission 2020 of CSI Tamil Parish is to Know More about Jesus and Making Jesus Know to the Unknown by our sincere & dedicated efforts. We should find and add **Minimum 20 New Members** to our Congregation.


It is not only the responsibility of the Church Pastor and the Committee; We as every member/ well-wisher of CSI Tamil Parish- Alain should work towards this Mission to achieve this for HIS Glory.


## Together we can…!!!

## Family to Family…

Family to family, we're glad you're our friends;
Our family and yours–everything blends.
Our closeness provides a safe harbor in storm,
A wonderful feeling, satisfying and warm.

We wish you the best on this Valentine's Day.
We're sending good thoughts–an affection bouquet.
Special friendship like yours is really a find
We think your great family is one of a kind.



# திருமறை தியானப்பகுதி




**அன்புக்குரியவர்களே!**

**யாருடைய வீட்டில் நீதியோடு ஆஸ்தியும், ஐஸ்வரியமும் நிலைத்திருக்கும்?** அதற்கு பதிலைத்தான் சங்கீதம் 112ல் பார்க்கிறோம்.

நேர்மையாளன் (Person of integrity) வீட்டில் ஆஸ்தியும், ஐஸ்வரியமும் நீதியோடு நிலைத்திருக்கும். நேர்மை (integrity) என்றால் சொன்ன சொல்லை முதலாவது நம்மிடத்திலும், இரண்டாவது பிறருக்கு கொடுத்த வார்த்தையை உயிராக நினைத்து காப்பாற்றுவது. நம்மிடத்தில் வார்த்தையை மனதிலே நமக்கு நாமே கொடுக்கிறோம், பின்னர் நம் மனசாட்சியையும் மீறி, யாரும் சாட்சி இல்லை என்பதால், எண்ணிய வார்த்தைகளை நேர்மையாளன் என்ற முறையில் மாற்றக்கூடாது! ஆனால் நாம் தானே யார் பார்க்கப்போகிறார்கள்? என்று மாற்றிக்கொள்கிறோம். இது நமக்கு நாமே நேர்மையாயிருப்பதில்லை. முதலாவதாக கர்த்தர் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கிறார், நம்முடைய மனசாட்சியும் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆதலால் கர்த்தருக்கு பயந்து (Spiritually Sensitive) நமக்கு நாமே நேர்மையாக இருக்க இந்த புதிய மாதத்தில் ஒரு புதிய ஆவிக்குரிய முயற்சியில் முழுமனதோடு நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம். அப்பொழுதுதான் நாம் எடுத்த முடிவில் நாம் தொடர்ந்து நிலைத்திருப்போம்.

முதலாவதாக நமக்கு நாமே உண்மையான நேர்மையை கடைபிடித்தால், பின்னர் நேர்மையின் அடுத்த அம்சமான பிறருக்கு கொடுத்த வார்த்தையிலும் வாக்குறுதியிலும் உயிராக உறுதியோடிருந்து ஒரு கிறிஸ்தவ நேர்மையாளன் என்ற

சாட்சியோடு தேவனை மகிமைப்படுத்துவதோடு, கிறிஸ்துவிற்கு கொடுத்த வாக்குறுதியிலும் நிலுத்திருந்து நம்முடைய வீட்டில் ஆஸ்தியும், ஐஸ்வர்யமும் நீதியோடு நிலைத்திருக்கச்செய்வோம். நாம் முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை!

இந்த ஆழமான ,சரியான புரிதலோடு இந்த 112'வது சங்கீதத்தை தியானித்து நம்முடைய அனுபவமாக்கிக்கொள்வோம். ஒரு மனிதனுடைய சாதனைகளை, நல்ல செயல்களைக்கூட மக்கள் மறந்து விடுவார்கள்! ஆனால் அந்த மனிதனுடைய நீதியோடுகூடிய நேர்மையை என்றென்றும் மறக்காமல் நினைவில் வைத்திருப்பார்கள்!

Here in verse 1 integrity begins with fear of God and delighted in the word of God. கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருப்பவன் தான், கர்த்தரை உண்மையாய் நேசிப்பவன் தான், கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவன்தான், உண்மையாகவே கர்த்தருக்கு பயப்படுவான், அவருடைய வார்த்தைகளைத்தியானித்து பொன்னிலும், பசும்பொன்னிலும் அதிகமாய் பிரியப்படுவான். அவனுடைய சந்ததிகூட இந்த பூமியில் எப்படியிருக்குமென்று 2வது வசனம் சொல்லுகிறது?

அது இந்த பூமியில் Mighty On this Earth காண்டா மிருகத்தைப்போல பலத்த சந்ததியாக, ஆரோக்கியமுள்ள சந்ததியாக, விசுவாசத்திலும் ஆரோக்கியமுள்ள சந்ததியாகயிருக்கும். இதன் விளைவாக நேர்மையாளன் வீட்டில் எப்பொழுதும் ஆஸ்தியும்,ஐஸ்வர்யமும் நிலைத்து, பெருகிக்கொண்டிருக்கும். ஆனால் அவன் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குள் நேர்மையாளனாக இருக்கவேண்டும். இந்த உலகத்தில் அநேக சுயநீதியுடைய நேர்மையாளர்களுமுண்டு என்பதை இந்த நேரத்தில் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களை குறித்ததல்ல இந்த சங்கீதம்.

As per verse 4 Light dawns in the darkness for the person of integrity in Christ, because he is always carrying the Light of this World, the Christ. What are his traits? He is gracious, and full of Compassion, and righteous in Christ. இங்கே இரக்கமென்பது ஆங்கில வேதத்தில் கிருபை நிறைந்தவர் Gracious என்று சரியான மொழிபெயர்ப்பை பார்க்கிறோம். கிருபை என்ற குணாதிசயம் இயேசுவுக்குறிய குணாதிசயம். அவரே பாவிகளை குற்றப்படுத்தாமல், நியாயந்தீர்காமல் மன்னித்து, அவர்களுக்காக ஜீவனையே கொடுத்தவர் (He showed unmerited favor towards undeserved Sinners).

கிறிஸ்தவ நேர்மையாளன் யாரையும் தன்னுடைய நேர்மையான வாழ்க்கையை முன்னிருத்தி பரிசேயனைப்போல (Luke 18:9-14),யாரையும் குற்றப்படுத்த, நியாயந்தீர்க்க மாட்டான்.காரணம் அவன் கிறிஸ்துவைப்போல கிருபை நிறைந்தவன். மேலும் பிறர்மீது மனவுருக்கமுள்ளவன், person of Empathy, Sympathy and full of Compassion. இயேசு எவ்வாறு பிறர் மீது, அவர்களுடைய கஷ்டங்களைக்கண்டு மனதுருக்கமுள்ளவராாக இருந்தாரோ அவ்வாறு மனதுருக்கத்தோடிருந்தால், ஏற்கனவே கிறிஸ்துவினால் இலவசமாக

**பாவக்கடன்களை கழித்து நீதிமானாக்கப்பட்டவன் Verse 5,9'ன்படி பிறருக்கு உதவ எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பான். A person of integrity is so generous in lending and helping to the needy and poor people. So, the person of integrity will not be moved by any power in this world and he is not afraid of bad news, because he is firmly rooted in Christ. Surely one day his horn and his strength will be exalted. எவ்வளவு பெரிய பெரிய ஆசீர்வாதங்களை ஒரு கிறிஸ்துவுக்குள்ளிரிக்கிற நேர்மையாளன் சுதந்தரித்துக் கொள்கிறான்!**

**நானும் கிறிஸ்துவுக்குள் ஒரு நேர்மையாளன்! என்று பிறர் சொல்லும்படி வாழ முயற்சிப்பேன் என்று தீர்மானம், வாக்கு நமக்கு நாமே கொடுத்து அந்த வாக்கை ஒரு நேர்மையாளராக நிறைவேற்றுவோம்.**

**கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிப்பாராக!**

**இப்படிக்கு**
**உங்கள் அன்பு ஆயர்,**
**Rev. M. Christopher Rajendran**




| | |
|---|---|
| Date / தியதி | 07$^{th}$ Feb 2020 |
| Short Service / சுருக்க ஆராதனை | 6:00 Am to 6:30 Am |
| Starting Time / தொடங்கும் நேரம் | 6:30 Am |
| Starting Location / தொடங்கும் இடம் | Oasis Campus, Alain |
| Picnic Location / இன்ப சுற்றுலா | Dubai |
| Picnic Coordinator / பொறுப்பாளர் | Mr. Rajavel / 050 449 1769 |

# செயலரிடமிருந்து...

**கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே...**

**இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.**

**சென்ற ஜனவரி மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். கன்மலை மேல் நிறுத்தி...கண்மணி போல் காத்து, புதிய மாதத்தை காண கிருபை செய்த தேவனுக்கு மறவாமல் அனுதினமும் நன்றி சொல்லுவோம்; அதிகமாய் ஸ்தோத்தரிப்போம்.**

**நமது சபையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஊழியத்தின் நிற்வாகிகளை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சிறுவர் வேதாகமப் பள்ளியின் டைரக்டராக திருமதி. அகஸ்டா லாரன்ஸ், ஆண்கள் சங்கத்தின் தலைவராக திரு.எம்.சி.கிறிஸ்டோபர், பெண்கள் ஐக்கிய சங்கத்தின் தலைவராக திருமதி. ஷாலி மெல்பின், வாலிபர் சங்கத்தின் தலைவராக திரு. சந்தோஷ் குமார், இணையதள பொறுப்பாளராக திரு. சுனித் சாமுவேல். இவர்கள் கர்த்தருடைய பணியை உண்மையும் உத்தமுமாய் உற்சாகத்தோடு செய்வதற்கு கர்த்தர் பெலனும், ஞானமும், கிருபையும் தந்தருள நாம் யாவரும் பாரத்தோடு இவர்களுக்காக அனுதினமும் ஜெபிப்போம்.**

**வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். நேசித்து தாங்குகின்ற ஒவ்வொருவருக்காகவும் நான் தேவனைத் துதிக்கிறேன். இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.**

**உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன்.**

**வரலாற்று நாயகனாம் இயேசுகிறிஸ்து நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் தொடர்ந்து பெரிய காரியங்களைச் செய்வாராக...!!!**

**இப்படிக்கு**
**அன்புடன் கிறிஸ்துவின் பணியில்**
**சுரேஷ் ராஜன்**

| சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|
| மூன்றாம் மணி | காலை ஒன்பது மணி | மத்தேயு 20:3 |
| ஆறாம் மணி | மதியம் பன்னிரண்டு மணி | மத்தேயு 20:5 |
| ஒன்பதாம் மணி | பிற்பகல் மூன்று மணி | மத்தேயு 20:5 |

## மாற்கு எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்


| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வாற்க்கச்சை | தோல்கச்சை | மாற்கு 1:6 |
| 2 | கீர்த்தி | புகழ் | மாற்கு 1:26 |
| 3 | துணிக்கை | துண்டு | மாற்கு 6:43 |
| 4 | தள்ளுதற்சீட்டு | மணவிலக்குச் சான்றிதழ் | மாற்கு 10:4 |
| 5 | சுதந்தரவாளி | சொத்துக்கு உரியவன் | மாற்கு 12:7 |

## லூக்கா எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பிரேவசித்து | சென்று, நுழைந்து | லூக்கா 1:9 |
| 2 | கடாட்சம் | அருள்பார்வை, கருணை | லூக்கா 1:24 |
| 3 | அகந்தை | அகங்காரம், நான் என்னும் பற்று, இருமாப்பு, செருக்கு | லூக்கா 1:51 |
| 4 | வர்த்தமானம் | நிகழ்கால நடப்பு | லூக்கா 1:65 |
| 5 | அருணோதயம் | சூரிய ஒளி முதலில் தோன்றும் காலைப்பொழுது, விடியல் | லூக்கா 1:79 |
| 6 | பிரசித்தம் | பலரும் அறிந்தது, நன்கு அறிமுகமானது, புகழ்பெற்றது | லூக்கா 2:17 |
| 7 | மாறுரை | விடை, பதில் | லூக்கா 2:47 |
| 8 | விசாரம் | மனக்கவலை, வருத்தம் | லூக்கா 2:48 |
| 9 | விருத்தி | வளர்ச்சி | லூக்கா 2:52 |
| 10 | உப்பரிகை | அரண்மனை போன்றவற்றின் மேல்மாடம் | லூக்கா 4:9 |
| 11 | நிமிட்டு | கிள்ளு | லூக்கா 6:1 |
| 12 | உத்திரம் | மரக்கட்டை | லூக்கா 6:42 |
| 13 | பரணி | சிறு ஜாடி, செப்பு | லூக்கா 7:37 |
| 14 | சம்பாஷணை | ஒருவேராடொருவர் பேசுதல், உரையாடுதல் | லூக்கா 9:30 |
| 15 | அலைக்கழித்தது | வலிப்புண்டாக்கியது | லூக்கா 9:42 |
| 16 | கலப்பை | மாடு பூட்டி நிலத்தை உழுவதற்குப் பயன்படும் (மரத்தாலான) கருவி | லூக்கா 9:62 |
| 17 | பாத்திரன் | தகுதியானவன் | லூக்கா 10:6 |
| 18 | நீர்க்கோவை | சளி, நீர்க்கோப்பினால் உண்டாகும் கபம், உடலின் புழையிடங்களில் நீர் திரண்டு தேங்கும் நோய் | லூக்கா 14:2 |
| 19 | அகத்தியம் | தவறாமல், அவசியமாக, கட்டாயம் | லூக்கா 14:18 |
| 20 | திராணி | சக்தி, பெலன் | லூக்கா 14:30 |

| | | | |
|---|---|---|---|
| 21 | பரம் | கடவுள், மேலுலகம் | லூக்கா 15:18 |
| 22 | உக்கிராணம் | வீட்டுச் சரக்கறை | லூக்கா 16:1 |
| 23 | மெச்சு | போற்று, வியந்து பாராட்டு | லூக்கா 16:8 |
| 24 | மாள்(ளு) | தீர், செலவாகு, அழி | லூக்கா 16:9 |
| 25 | பரியாசம் | ஏளனம் | லூக்கா 16:14 |
| 26 | அவம் | பயனின்மை, வெற்றுநிலை | லூக்கா 16:17 |
| 27 | இரத்தாம்பரம் | செந்நிறமுள்ள, சிவப்பான | லூக்கா 16:19 |
| 28 | சம்பிரமம் | களிப்பு, பேருவகை, ஆடம்பரம் | லூக்கா 16:19 |
| 29 | துணுக்கு | துண்டு, சிறு பகுதி | லூக்கா 16:21 |
| 30 | தரித்திரன் | ஏழை | லூக்கா 16:22 |
| 31 | வருஷித்து | பெய்து | லூக்கா 17:29 |
| 32 | திரிகை திரிக்கிற | மாவு அரைக்கிற | லூக்கா 17:35 |
| 33 | அலட்டு | வருத்து | லூக்கா 18:5 |
| 34 | திண்டி | உணவு | லூக்கா 21:34 |
| 35 | வேவுகாரர் | ஒற்றர் | லூக்கா 20:20 |
| 36 | இராயன் | சீசன் | லூக்கா 20:24 |

**தமிழ்நாட்டில்**
**முதன்முதலாக தமிழில் அச்சடிக்கப்பட்ட புத்தகம்**
**பைபிள் ஆகும்.**



# இராபட்-டி-நோபிலி (1577-1656)



ராபர்டோ—டி—நோபிலி இத்தாலியில் ஒரு அரச குடும்பத்தில் பிறந்து தன்னுடைய 18'ம் வயதில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கடவுளின் அழைப்பின்படி ஒரு மிஷனெரியாக ஊழியம் செய்ய தன்னை அற்பணித்தார். 1605'ஆம் ஆண்டில் ராபட்—டி—நொபிலி தன்னை ரோமன் கத்தோலிக்க ஜேசுட் மிஷனரியாக சேர்ந்து இத்தாலியிலிருந்தது தமிழ்நாட்டின் மதுரையில் பிராமணர்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்ய அனுப்பப்பட்டார்.

மதுரைக்கு வந்த நோபிலி தன்னுடைய ஐரோப்பிய வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தின் மூலம் இந்தியாவின் மக்களுக்கு (பிராமணர்) ஒருபோதும் சுவிஷேசம் அறிவிக்கமுடியாது என்று அவர் உடனடியாக கண்டு கொண்டார். ஆகவே இந்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் தன்னை ஒரு சன்னியாசியாக மாற்றிக்கொண்டு அதற்காக பொருத்தமான சிகை அலங்காரம் செய்து இந்திய கலாச்சார முறையை பின்பற்றி, அவர் தனது ஐரோப்பிய கருப்பு அங்கியை மாற்றிவிட்டு காவி அங்கியையும், தோல் செருப்புக்கு பதிலாக மரத்தால் செய்யப்பட்ட பாதரட்சையையும் அணிந்துகொண்டு சுவிசேஷம் அறிவித்தார்.




மூன்று ஆண்டுகளில் நோபிலி தமிழ், தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றார். மேலும் இந்து மத வேதங்களில் தேர்ச்சி பெற்ற முதல் ஐரோப்பிர் என்றால் மிகையாகாது. மேலும் இந்துக்களின் புனித நூல்களான வேதங்கள், உபநிடதங்கள் யாவையும் கற்றுகொண்டார். அவர் இந்திய தத்துவங்களை (Indian Philosophy) கிறிஸ்தவ இறையியல் கோட்பாடுகளை விவரித்து சொல்வதற்காக இவைகளை நன்கு பயன்படுத்தினார்.

பின்னர் டி—நோபிலி ஓர மடத்தை நிறுவி தன்னை ஒரு குருவாக நிலைநிறுத்தி துறவர வாழ்க்கை நடத்தி வந்தார். தன்னை வெளிநாட்டு துறவியாக காண்பித்ததினால், இவருடைய வாழ்க்கையை கண்ட பல பிராமணர்கள் அவரைப் தேடி வந்தார்கள். நோபிலி சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக யூதர்களுக்கு யூதனைபோலவும் கிரேக்கர்களுக்கு கிரேக்கரை போலவே பிராமணர்களுக்கு பிராமணர்களின்

கலாச்சாரத்தின்படி அதிகாலையில் குளித்து; சம்மணமிட்டு அமர்ந்து, தன்னை ஒரு இந்திய சன்னியாசியாக காட்டிக்கொண்டார்.

ஆகவே அவர் ஒருபோதும் எந்த ஒரு அசைவ உணவையும் உண்ணாமல், காவி உடையணிந்து, நெற்றியில் சந்தனத்தாலும் குங்குமத்தினாலும் திலகமிட்டு, தலைமுடியை மழித்து அதில் சிறு குடுமியுடன் தன்னை இந்திய குருவாக மாற்றிக்கொண்டார். உயர்ஜாதி மக்களுடன் தெளிவான தமிழில் பேசினார், தனக்கு உணவு சமைப்பதற்காக ஒரு பிராமண சமையல்காரரையும் வைத்துக்கொண்டார். எப்போதுமே, பிராமணர்களுடன் மட்டுமே சாப்பிட்டார், அவர்களோடு மட்டுமே கலந்துரையாடினார்.



மேலும் பிராமணர்களை போலவே பூநூலையும் அணிந்துகொண்டார். இதைப்பார்த்த மக்கள் நோபிலியை சத்தியத்தின் தத்துவ போதகர் என்று அழைத்தனர். இவருடைய அனுகுமுறையால் பலர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். இப்படியாக நோபிலி அவர்களின் பெயரும் புகழும் உயர்ந்தது. அவரைப் பார்க்க வந்தவர்களுடன் கிறிஸ்தவ மதபோதனைகளை இந்திய தத்துவத்தின் அடிப்படையில் பல விவாதங்கள் செய்தார். அங்கு இருந்த இந்து பண்டிதர்களிடம் அநேக சொற்பொழிவுகளை நடத்தினார்.

இவருடைய ஊழியத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களிடம் உருவ வழிபாடு காரியங்களை தவிர்த்து அவர்களின் உடை, உணவு, உடை, கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களை மாற்றத் தேவையில்லை என்று வலியுறுத்தினார். அவர் தமிழில் ஞானோபதேசம், ஞானசஞ்சீவி மற்றும் நூறு சமஸ்கிருத ஸ்லோகங்களில் கிறிஸ்தவ கோட்பாட்டின் சுருக்கத்தையும் எழுதினார். இவருடைய எழுத்துக்கள் நவீன தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்தது.

அவர் தமிழில் ‘நித்திய வாழ்க்கையின் உரையாடல்’ மற்றும் ‘வாழ்க்கையின் பொருளை விசாரித்தல்’ ஆகிய இரண்டு புத்தகங்களை எழுதி உள்ளூர் பிராமணர்களை விவாதங்களுக்கு அழைப்பு கொடுத்தார். 'செந்தமிழ்' என்ற பெயரில் உயர்தர தமிழ் கவிதைகளை எழுதினார். தமிழில் அவரது உரைநடை படைப்புகள் அனைவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. அவரது காலத்தில் அவரது பல எழுத்துக்கள் அச்சிட முடியவில்லை, அவை பனை ஒலைகளில் இருந்தன. டி–நோபிலியின் இந்திய கலாச்சாரத்தின்படி இந்திய மக்களுக்காய் சுவிஷேசம் அறிவிக்க, சமஸ்கிருத வார்த்தைகளை பயன்படுத்தினார். இதன் விளைவாக 1200’க்கும் மேற்பட்ட பிராமணர்கள் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

பின்பு நோபிலி அவர்கள் சேலம், திருச்சி மற்றும் மொரமங்கலம் பகுதியிலும் ஊழியத்தை நிறைவேற்றினார். இதனால் 1625’ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று

சேந்தமங்கலத்தின் ஆட்சியாளரான திருமங்கல நாயக்கர், அவருடைய தாய், மனைவி மற்றும் பிள்ளைகள் யாவரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள். 1645'ம் ஆண்டு அவர் மதுரையை விட்டு வெளியேறி மைலாப்பூருக்கு சென்றாம். அங்கேயே தன்னுடைய இறுதி காலத்தை கழித்தார். பின்னர் ஜனவரி 16, 1656'இல் தனது 79'ம் வயதில் இவ்வுலக ஓட்டத்தை வெற்றியாய் நிறைவு செய்தார்.

ஒரு மிஷனரியாக சென்ற நோபிலி, அவருடைய ஊழியத்தின் மூலம் தமிழ்நாட்டில் 1656இல் 30,000 பேராக இருந்த கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை 1706 ஆண்டில் 1,00,000'க்கும் அதிகமாய் இருந்தது. இராபட்–டி–நோபிலி அவர்கள் இந்திய கிறிஸ்தவ இறையியலின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார். நோபிலி அவர்கள் எதிர் காலத்தில் இந்திய மக்களுக்கு அவர்கள் சொந்த மொழிகளில் கிறிஸ்துவை அறிவிக்க விரும்பினார். ஏனெனில் எல்லா கிறிஸ்தவ மதச் சொற்களும் ஐரோப்பிய வார்த்தைகளாக இருந்தன. கிறிஸ்தவ இறையியலில் நன்கு பயிற்சி பெறுவதற்காக பிராமணர்களுக்கு என்று வேதாகம கல்லூரி நிறுவ வேண்டும் என்று மிகவும் பிரயாசப்பட்டார் ஆனால் அவருடைய திட்டம் ஒருபோதும் நிறைவேறவில்லை.

இந்திய அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுகின்ற சாது சுந்தர் சிங் அவர்களின் மேற்கோளுடன் நான் இங்கே முடிக்க விரும்புகிறேன், அவர் கூறுகின்றார் "கிறிஸ்தவ ஊழியர்களே, கிறிஸ்தவ நற்செய்தியை அறிவிக்க அவரவருடைய கலாச்சார அடிப்படையில் நற்செய்தியை பறைசாற்றுங்கள். இல்லையென்றால் உங்கள் நற்செய்தி சமுதாயத்தில் கீழ்தட்டு மக்களை மாத்திரமே சென்றடையும். இதுதான் இன்றுவரை நடந்து கொண்டு இருக்கின்றது. இந்த சூழ்நிலையை மாற்ற உங்கள் பிள்ளைகளை ஊழியத்திற்கு அற்பணிப்பீர்களா?

இந்தியாவில் உள்ள உயர்ஜாதி மக்கள் உட்பட அனைத்து மக்களையும் கிறிஸ்துவுக்கு நேராய் வழி நடத்தும் வல்லமை கிறிஸ்தவ நற்செய்திக்கு உண்டு. ஒன்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் மிஷனெரிமார்களே, கிறிஸ்தவர்கள் அல்லாத ஒவ்வொருவரும் மிஷனெரி பணித்தளம்.

ஆகவே, நம்முடைய கிறிஸ்தவ குணாதிசங்கள் மூலம் இந்த சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். வாருங்கள் நாம் எல்லோரும் சேர்ந்து இந்திய தேசத்தை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம். நன்றி.

**ஒரு விசுவாசி,**
**வேண்டுமென்றே, விருப்பத்துடன்,**
**தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யும்பொழுது,**
**சிறு காற்றும் பெரும் சூறாவளியாக மாறுகிறது...**
**-சார்லஸ் ஸ்டான்லி**

# "சத்துருக்களை சிநேகியுங்கள்"



ஒரு கிறிஸ்தவ கல்லூரி விடுதி, அங்கு ஏராளம் கிறிஸ்தவ மாணவர்கள் தங்கிப்படித்து வந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் கறிஸ்துவை அறியாதவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். சிலர் கிறிஸ்துவை பரியாசம் செய்கிறவர்களாகவும் கூட இருந்தார்கள்!

அந்த விடுதியின் கடவுள் பக்கி நிறைந்த ஒரு வெளிநாட்டு மாணவன் தங்கியிருந்தான்! ஒரு மாணவன் வெளிநாட்டு மாணவனை அதிகம் கேலி செய்வது வழக்கமாக கொண்டிருந்தான். இப்படி வெளி நாட்டு மாணவனை பரிகசித்துக் கொண்டிருந்த மணவன் கொடிய நோயால் பாதிக்கப்பட்டான். ஒரு முறை அவன் கடுமையான தலைவியினால் துடித்துக் கொண்டிருந்தான்.

அந்த பெரிய விடுதியில் இவனுக்காக அனுதாபப்படுவோர் யாரும் இல்லை!

ஆனால் தேவபக்தி நிறைந்த அந்த அயல்நாட்டு மாணவன் மிகுந்த அனுதாபத்துடன் அவனிடம் வந்து, தேவையான சில மருந்துகளைக் கொடுத்து கூடவே அவனுக்காக ஊக்கமாக ஜெபம் செய்யவும் செய்தான்!

இந்த நிகழ்ச்சி அந்த மாணவனை அதிகமாக சிந்திக்க செய்தது. நாளடைவில் அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஒரு சிறந்த ஊழியக்காரனாக மாறினான்! இன்று ஆயிரக்கணக்கான மக்கள் அவன் மூலம் கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறி வருகிறார்கள்!

**"உங்கள் சத்துருக்களை சிகேியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத். 5:44).**

**— நெல்சன் சோபித ராஜ்**

# தேவனோடு இணைந்து செயல்படுதல்

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாக இருந்தான். ஆப்பொழுது ஏசாயா தீர்க்கத்தரிசி (2 இராஜா: 20) அவனிடத்தில் வந்து நீர் உம்முடைய வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்தும், நீர் இனி பிழைக்க மாட்டீர், மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். அப்பொழுது எசேக்கியா ராஜா தேவனை நோக்கி, கர்த்தாவே உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து உமது பார்வைக்கு நலமானதை செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று அழுது விண்ணப்பம் பண்ணின போது, தேவன் அவன் ஜெபத்தைக் கேட்டு அவனை குணமாக்கி அவனுக்கு 15 வருடங்களைக் கூட்டிக் கொடுத்தார். எசேக்கியா ராஜா உண்மையும் உத்தமுமாய் நடந்து கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை செய்த போது தேவன் அவன் வாழ்கையில் அற்புதம் செய்தார்.

எசேக்கியா ராஜா எப்படி தேவனுக்கு பிரியமாக நடந்தான், 2 இராஜா 18 ஆம் அதிகாரத்தை நாம் படித்துப் பார்க்கும் போது, எசேக்கியா ராஜா கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான், எல்லா விக்கிரகத் தோப்புகளையும் அழித்துப்போட்டான், தேவன் மேல் நம்பிக்கை உள்ளவனாக இருந்தான், தேவனின் கற்பனைகளை கைக்கொண்டு நடந்தான், அசரியா இராஜாவை சேவிக்காமல் அவன் அதிகாரங்களை தள்ளிவிட்டான், எனவே அவன் சென்ற இடமெல்லாம் தேவன் அவனுக்கு அனுகூலமாய் இருந்தார் என்று பார்க்கிறோம். மேலும் அவனை குணமாக்கி அவனுக்கு 15 வருடங்களை இவ்வுலகிலே கூட்டிக் கொடுத்தார்.

மேலும், "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (ஆதி 6:9)என்று வேதத்தில் பார்க்கிறோம். தேவன் பூமியை ஜலத்தினால் அழிக்கும போது தேவனால், நோவாவும் அவன் குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, "நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பக நடந்து கொண்டு உத்தமனாயிரு"(ஆதி 17:1)என்று உரைத்தார். ஆபிரகாம் கர்த்தரின் வாக்குப்படி நடந்து, தேவனுடைய கரத்தினின்று பெற்றுக் கொணட ஆசீர்வாதங்கள் நமக்கு தெரியும்.

இயேசு கிறிஸ்து நாத்தான்வேலைப் பார்த்து, "இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" (யோவான் 1:47) என்று சாட்சி கொடுக்கிறார். மேலும் அதே அதிகாரம் 56-ம் வசனத்தில் "இதோ வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையம் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லு கிறேன்" என்று திருவாய் மொழிந்தருளினார். எவ்வளவு மேலான ஆசீர்வாதம்.

இன்னும், இப்படியான அனேக நபர்களை நாம் வேதத்திலே காணலாம். இதன் மூலம் நாம் நமது வாழ்கையில் என்ன கற்றுக் கொள்கிறோம்? எப்போதும் நம் வாழ்கை மேலாக அமைய வேண்டும் என்று வாஞ்சிக்கின்றோமா? தேவன் நம்மிடம் என்ன எதிர் பார்க்கிறார்? அவர் காட்டும் பாதையில் நடந்து அவரோடு இணைந்து செயல் படுவதையே விரும்புகிறார். நாம் எவ்வாறு காணப்படுகிறோம் என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். தேவனோடு இணைந்து செயல்படுவோம், நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்வோம்.

*- M.Nesamony.*




கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி அனுப்புங்கள்/தெரியப்படுத்துங்கள். கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

**From: Mr. A.S Kannan / Vice President CSI TP Alain**

**In 1 Thessalonians 5:16-18, the Bible says: "Rejoice always, pray without ceasing, give thanks in all circumstances; for this is the will of God in Christ Jesus for you."**

**We always remember to praise our Loving God for all life-changing events that come along as per His will and grace at the right time.**

**Our family is humbled to submit our testimony about the recent biggest blessing - our Elder Daughter AKSHAYA's Wedding. In spite of many hurdles, with the Grace of our Lord Jesus Christ our Savior, who stood and guided us to perform the Wedding in a Grand way. The Bible reminds us in James 1:17, "Every good and perfect gift is from above, coming down from the Father."**

**Our family thank each member who prayed for us continually and during the Wedding preparations done by my wife and Brother in Law, all alone as I was here in UAE.**

**In Psalms 118:29, the Bible also says: "Give thanks to the Lord for He is good, His love endures forever." We pray for Our God's abundant Blessings to everyone.**

**Thank You Lord for Your never ending unconditional, unfailing love on us and please help to uplift our spirit. Amen.**

## From Mrs. Shalini Vimala Kingsly:

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. என்னுடைய மகள் ஜோஷீக்கா இப்பொழுது இந்தியாவில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளை கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் துபாய் பட்டணம் கொண்டுவர நாங்கள் முயற்சித்தபொழுது; அவளுடைய பாஸ்போர் புதுபிக்கும் பணியில் பல பிரச்சனைகளை சந்திக்க நேர்ந்தது. ஒரு சூழ்நிலையில் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஒரு பெரிய எதிர்பார்ப்போடு நாங்கள் காத்திருந்தோம். கர்த்தர் எல்லா தடைகளையும் நீக்கி தகுந்த நேரத்தில் பாஸ்போர்ட் கிடைப்பதற்கு கிருபை கூர்ந்தார். மகளும் இந்த இடத்தில் கடந்து வந்து இந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் எங்களோடு கூட இருக்க கர்த்தர் கிருபை கொண்டார் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## அவசர ஜெபக்குறிப்பு



நமது திருச்சபையின் விசுவாசி திருமதி ரீட்டா அவர்களின் மகள் ஸ்ரீலங்கா தேசத்திலே கேஸ் சிலிண்டர் வெடித்து விபத்துக்குள்ளானதில் தன் உடல் முழுவதும் தீயினால் பெருத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். நம்முடைய ஜெபத்தை நாடியிருக்கிறார்கள்.

திருச்சபையாய் ஒன்றிணைந்து அனுதின ஜெபத்தில் இவர்கள் பூரண குணமடையும் வரை நாம் ஜெபிக்க அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.




செழிப்பான சுவிசேஷம் மனிதனை மையமாகக் கொண்டிருக்கிறது. மனுஷனுக்கு அவன் வாழ்வில் தேவையான அனைத்தையும் தேவன் அவனுக்கு தருவார்; அதன் மூலமாக இந்த பூமியில் அவன் வாழ்க்கையில் சொகுசாக இருப்பது மாத்திரமல்ல; அவருடைய ஜீவியத்தின் இறுதியில் பரலோகத்தில் அவனுக்கு ஒரு ஆசனத்தை வழங்கிடும் எனக் கூறுகிறது.

இன்று பல பிரசங்கங்கள்; இயேசு கிறிஸ்து நம்முடைய அனைத்து பாவங்களையும் மன்னிப்பார், நம்முடைய நோய்கள் அனைத்தையும் சுகமாக்குவார், பொருளாதார ஆசீர்வாதங்களையும் செழிப்பையும் தருவார். மனிதனுடைய விருப்பம் என்னவோ அதை எல்லாம் கொடுப்பதற்கு அவனுடைய வேலைக்காரனாய் தேவன் அந்த மனுஷனை சுற்றி வந்து கொண்டிருப்பார்; இதற்கு அந்த மனிதன் என்ன செய்ய வேண்டும். விசுவாசிக்க வேண்டும்... விசுவாசித்து அனைத்து பொருளாதார ஆசீர்வாதங்களையும் இயேசுவின் நாமத்தில் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்; இதுவே செழிப்பான சுவிசேஷம். எபப்டியெனில் இந்த சுவிசேஷத்தில் மனந்திரும்ப வேண்டும் என ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை.

யோவான் ஸ்நானகன் தொடங்கி இயேசுவும், பேதுருவும் மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் மனம்திரும்புதலை எல்லாவற்றிற்கும் முதலாக பிரசங்கித்தார்கள். இப்படி தேவனே மையமாகக்கொண்ட சுவிசேஷம் மனம் திரும்பும்படி மனுஷனை அழைக்கிறது. சிலுவையில் இயேசுகிறிஸ்து அடைந்த மரணத்தின் மீது கொண்டிருக்கும் விசுவாசம் அவன் மனம் திரும்பினால் மாத்திரமே அவனுடைய பாவங்களை மன்னித்து விட முடியும். அதன் பின்பு பரிசுத்த ஆவியின் அருளைப் பெற்று அது அளித்திடும் பலனை கொண்டு நாள்தோறும் சுயத்தை வெறுத்து அதன்மூலம் தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியும். இதைத்தான் இயேசுவும் அப்போஸ்தலரும் பிரசங்கித்தார்கள்.

செழிப்பான சுவிசேஷம் வாசலை விசாலமாக்கி வழியை அகலமாக்கி தருகிறது. அதன் விளைவாய் ஒருவன் தன் சுயத்தை வெறுத்து விட தேவை இல்லை அல்லது சுய ஆர்வத்தில் வாழும் வாழ்க்கைக்கு அதாவது தன் இஷ்டப்படி வாழும் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க தேவையில்லை, தன் சொந்த ஆதாரத்தை மட்டும் தேடுவதை நிறுத்தி தேவையில்லை. இத்தனை பெரிய விசாலத்தில் மிக எளிதாக வாழ்ந்து கொள்ளலாம் என்ற இந்த செழிப்பான சுவிசேஷம் பிரிக்கப்படும் கூட்டங்களுக்கு லட்சக்கணக்கில் ஜனங்கள் இன்றும் கூறுகிறார்கள்.

தேவனுடைய ஆசீர்வாதங்களை மட்டும் பெற்றுக்கொண்டு எப்படியேனும் வாழ்ந்து தன்னுடைய நாட்களை கழித்து கொள்ளாதீர்கள்.

தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை பெறுவதில் மட்டும் குறியாக இருக்காதீர்கள். தேவனுக்காக வைராக்கியமாக வாழ்வதிலும், அவருக்கென்று எழும்பிப் பிரகாசிப்பதிலும் உறுதியாய் இருக்க கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரலோகத்தில் உங்கள் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க முடியும்.

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால்**
**அவன் தன்னைத்தான் வெறுத்து**
**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு**
**என்னைப் பின்பற்றக் கடவன்**







| Size of Major Religious Groups, 2018 | | |
|---|---|---|
| **Religion** | | **Percent** |
| Christianity | | 31.5% |
| Islam | | 24.6% |
| Unaffiliated | | 15.2% |
| Hinduism | | 15% |
| Buddhism | | 7.7% |
| Folk Religion | | 5.9% |
| Other (includes Judaism, Baháí, Sikhism, Jainism) | | 1.0% |

# பாடல் பிறந்த கதை






இந்தப்பாடலை அறியாத கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. இந்தப் பாடல், ஆத்தும இரட்சிப்பின் பாடல் என்று அழைக்கப்படுகிறது. மிகப் பெரிய தேவ ஊழியரான, பில்லி கிரகாம் அவர்கள், தன்னுடைய கூட்டங்களின் முடிவில், ஆத்துமாக்களை இரட்சிப்புக்கென்று அழைக்கும் போது இந்தப் பாடலை பாடி அழைப்பது வழக்கம்.

இந்தப் பாடலை எழுதியவர் சார்லட் எலியாட் (Charlotte Elliot) என்னும் அம்மையார் ஆவார். அவர் தனது 30 வயது வரை மிகவும், சந்தோஷமாய், எதைக் குறித்தும் கவலையில்லாதவராக, உற்சாகமானவராய், பாடிப் பறக்கும் பறவையைப் போல வாழ்ந்து வந்தார். அவர் 30 வயதை தாண்டிய போது, அவருக்கு ஒரு வியாதி வந்தது. அது அவரை படுக்கையை விட்டு எழுந்தரிக்க முடியாதபடி, அந்தப் பறவையின் காலை ஒடித்துப் போட்டதுப் போல படுக்கை கிடையாக்கிப் போட்டது.

அந்த அம்மையார் மனம் ஒடிந்துப் போனார்கள். தேவன் மேலும் உலகத்தில் உள்ள யாவர் மேலும் அவர்களுக்கு கோபம் வந்தது. சுயபரிதாபம் அவர்களை ஆட்கொண்டது. அப்பொழுது அவருடைய தகப்பனார், தங்கள் குடும்ப உறவினரும் கர்த்தருடைய ஊழியரும் பாடகருமான டாக்டர், சீசர் மலான் (Dr. Caesar Malan) என்னும் ஊழியரை தங்களது வீட்டிற்கு அழைத்தார். அவர் வந்துப் பேசினால் மகளுடைய இருதயம் மாறும் என்று நினைத்தார். அதுப்போல, அந்த டாக்டரும் வந்து சார்லட்டிடம் பேசிய போது, அவர்கள் தன்

இருதயத்திலுள்ள வெறுப்பை எடுத்துக் கொட்டினார்கள். தேவனைப் பற்றிக் குறை கூறினார்கள். அதைக் கேட்ட அந்த டாக்டர், 'நீங்கள் மிகவும் களைத்து இருக்கிறீர்கள், வெறுப்பையும், கோபத்தையும் உள்ளடக்கி, சோர்ந்துப் போயிருக்கிறீர்கள்' என்றுச் சொன்னார். அப்போது, சார்லட், 'நான் சந்தோஷத்தை பெற்றுக் கொள்வதற்கு என்னச் செய்ய வேண்டும் என்றுக் கேட்டார்கள். அதற்கு டாக்டர், 'நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்றார். அப்போது அவர்கள், 'நான் என்வாழ்வில் சில காரியங்கள் சரிசெய்ய வேண்டி உள்ளது. அவற்றை சரிசெய்தப் பிறகு நான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறேன்' என்றுக் கூறினார்கள். அதற்கு டாக்டர், 'நீங்கள் இருக்கிற வண்ணமாகவே கிறிஸ்துவிடம் வாருங்கள், அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். மட்டுமல்ல, உங்கள் வெறுப்பு, கோபத்திற்கு பதிலாக, சந்தோஷத்தையும் சமாதானத்தையம் தருவார்' என்றுக் கூறினார்.

அப்போதே அந்த அம்மையார், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அந்த நாளில்தானே இரட்சிக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து அந்த நாளை தனது ஆவிக்குரிய பிறந்தநாள் என்று ஒவ்வொரு வருடமும் கொண்டாடினர்கள்.

பதினான்கு வருடங்கள் கழித்து, அவருடைய சகோதரன் ஒரு போதகராக இருந்தவர், அவர் ஏழையான ஊழியர்களின் பிள்ளைகளுக்கு, ஒரு பள்ளியை ஆரம்பிக்க விழைந்தார். ஆனால், அவருக்கு போதிய பண உதவி இல்லாததால், என்ன செய்வது என்று சார்லட்டிடம் கேட்டபோது, அவர்கள் ஒரு பாடலை எழுதி அதை வைத்து, நிதியை திரட்டலாம் என்றுக் கூறினார்கள். அப்போது அந்த சீசர் மலான் என்ற டாக்டர் சொன்ன 'இருக்கிற வண்ணமாகவே கிறிஸ்துவிடம் வாருங்கள்' என்றுச் சொன்ன வார்த்தைகளை, ஞாபகத்தில் வைத்து, இந்தப் பாடலை எழுதி, அதன் மூலம் பணத்தை திரட்டி, அந்தப் பள்ளியைக் கட்டினார்கள்.

சார்லட் தன் வியாதியிலிருந்து கடைசி வரை சுகமடையவில்லை என்றாலும், கடைசி வரை வீட்டிலேயே சிறைப்பட்டு இருந்தாலும் அவர்களுடைய இருதயம் தன் சிருஷ்டிகராகிய கர்த்தரை நித்தமும் துதித்து, அவர்கள், தன் தேவனிடத்தில் நேசத்தை வைத்திருந்தபடியால், 150 பாடல்களை இயற்றினார்கள். அவை ஆங்கில கிறிஸ்தவ வரலாற்றில், ஒரு எழுப்புதலை உருவாக்கிற்று என்பது உண்மை.

தங்கள் பெலவீனத்திலும் கர்த்தருக்கென்று பாடல்களை இயற்றி பாடிய அந்தக் கவிக்குயில், தனது 82ஆவது வயதில், நித்தியமான சுகத்தோடு, பெலவீனங்கள் மாறி தான் நேசித்த தேவனோடு என்றென்றும் வாழும்படி

**பறந்துச் சென்றது. ஆனால் அவர் இயற்றிய பாடல்கள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு இன்றளவும் பாடப்பட்டு வருகிறது. அல்லேலூயா!**

**நான் பாவிதான் மெய்யாயினும்**
**சீர் நேர்மை செல்வம் மோட்சமும்**
**உம்மாலே பெற்று வாழவும்**
**என் மீட்பரே, வந்தேன் வந்தேன்...**



சொந்தங்களுடன் கருத்து வேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்

நண்பர்களுடன் கருத்து வேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்

அண்டை வீட்டாருடன் பிரச்சனை
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்

உறவினர்களுடன் கருத்துவேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்

விசுவாசிகளுடன் பிரச்சனை
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்



ஆனாலும் வேதத்தை ஒழுங்காக தியானித்தேன்
அனுதினம் அல்லும் பகலும் வேதம் வாசித்தேன்
உபவாசம் மேற்கொண்டேன், தசமபாகம் கொடுத்தேன்
ஆவிக்குரிய போதகரிடம் ஆவிக்குரிய காரியங்களை சம்பாஷித்தேன்
கொஞ்சகாலத்தில் மரணம் என்னை சந்தித்தது
பரலோகாகம் செல்வேன் என்று நம்பிக்கையோடு சென்றேன்

தேவதூதர்கள் ஜீவபுஸ்தகத்தை புரட்டி உன் பெயர் இல்லை என்றனர்
ஏன் இந்த் நிலைமை என்று கதறினேன்
மன்னிக்க மறந்தாயே மகளே(னே)
என்று ஆண்டவர் சொன்னார்

# சிறுவர் பகுதி / Children's Corner


**FORGIVE...BE FORGIVEN** — A Joyful 'toon by Mike Waters




Do not judge, and you will not be judged. Do not condemn, and you will not be condemned. Forgive, and you will be forgiven.
– Luke 6:37 NIV



# Kids Coloring (Kinder & Beginner)




Dear Kids... Write your name... here...

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## Jesus Healed a Blind Man Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the 10 things that are different.





**Your Name Here:**

# REARRANGE THE JUMBLED BIBLE CHARACTERS NAME FROM OLD TESTAMENT

| S/N | Jumbled Word | Rearrange the Words | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | R A A N O | | | | | | | | |
| 2 | A C I N | | | | | | | | |
| 3 | A B O Z | | | | | | | | |
| 4 | N C A A N A | | | | | | | | |
| 5 | I E L A D N | | | | | | | | |
| 6 | I S A H E L | | | | | | | | |
| 7 | A I T L G I O | | | | | | | | |
| 8 | A E M H L S I | | | | | | | | |
| 9 | E S E S J | | | | | | | | |
| 10 | H J E T O R | | | | | | | | |
| 11 | A N A N T O H J | | | | | | | | |
| 12 | O M A I N | | | | | | | | |
| 13 | U L E M S A | | | | | | | | |
| 14 | O E I N M S | | | | | | | | |
| 15 | E H O S J P | | | | | | | | |
| 16 | O S U A J H | | | | | | | | |
| 17 | E E S H R T | | | | | | | | |
| 18 | L R C A E H | | | | | | | | |
| 19 | H A A S R | | | | | | | | |
| 20 | O H N E C | | | | | | | | |

| Your Name here… | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)




1. Job lived in the place called _________ ↓
2. Job had _________ sons. →
3. He had _________ daughters. →
4. Along with angels who came to meet god? →
5. Who attacked job's ox and donkeys? ↓
6. _________ came from god and destroyed the sheep's and servants. →
7. From where did the wind come from and struck job's children? ↓

## Fill in the Verse

8. ___________I came from my mother's womb....." ↓

"The Lord (9)↓ _________ and the Lord has (10)↓ ________ away; may the name of the Lord be (11) → ________."

"Perhaps my children have (12)↓ _________ and (13)→ ________ God in their hearts.

*Your Name Please...*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## (Primary & Above)

Do you know it by heart? Find the answer along with the book, chapter and the verse.

Check if your stewards know it by heart...

1) What should you not make for yourself?
   a) Idol b) Enemity c) hatred

2) You shall have no ________________________ before me.

3) Which day should we remember and set aside for god? And why?

4) You shall not __________ the__________ of ____________ your __________.

5) Whom must you honor so that you may live long in the land which God gave you?

6) You shall not bear false witness against whom?
   a) Neighbor b) Mother c) Father

7) What all should you not do? (a) Murder (b) adultery (c) steal
   I) a,b II) a,c III) a,b,c

8) What all should you not covet?

I am the _______________________ who brought you out of Egypt, out of the land of slavery.

**Knowing is not enough**
**Living as per it, is imperative....**

| Your Name Here... |
| --- |
| |

## Kids who did the Coloring & Spot Difference

Crasslin Devona / Reagan Shan / Johan Sanjo
Jania Preni / Rishon Yojit / Ridhun Yojit
Eion Jaden / Hartlyn Herchil / Jason Eric
Jeremiah / Jemima / Jonathan




## Kids who did the Missing Letters

Shelbino / Ridhun / Jason Eric
Eric Jayden / Johan Sanjo
Joshua/ Jonathan/ Jeremiah

## Children who successfully did Bible Word Search

Roshan /Lokesh/ Naveen / Shelbino
Jason Eric / Eric Jayden / Ridhun / Joshua Joshika/
Dennis/ Angelin/ Annlin / Jonathan / Jeremiah

## Children who successfully did the Bible Cross Word

Roshan / Shelbino / Dennis / Jason
Eric Jayden / Annlin / Angelin / Joshua / Joshika / Jonathan






# வேத வினா-விடை போட்டி

## (ஓசியா: 6–14)

1. கர்த்தர் யாரை பிள்ளைகற்றவர்களாக்குவேன் என்று கூறுகிறார்?
2. எப்பிராயீம் அந்நிய காரியமாக எண்ணியது எது.?
3. பலியையும், தகனபலியையும் பார்க்கிலும் தேவன் எதை விரும்புகிறார்.?
4. கர்த்தருடைய வழிகள் எப்படிப்பட்டவை? அதில் இடறிவிழுபவர்கள் யார்?
5. அன்பின் கயிறுகளால் கர்த்தர் யாரைக் கட்டி இழுத்தார்?
6. கர்த்தருடைய நாமசங்கீர்த்தனம் எது?
7. அந்நிய ஜனங்களோடே கலந்து, திருப்பிபோடபடாத அப்பம் யார்?
8. ஏன் சமாரியாவின் குழந்தைகள் மோதி அடிக்கப்பட்டார்கள்?
9. இஸ்ரவேலின் அலங்காரமும், வாசனையும் எதை போல் இருக்கும்?
10. அக்கிரமம் செய்கிறவர்களின் பட்டணம் எது?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

ஓசியா (4 : 11) | 2. ஓசியா (1 : 4, 6, 9)
3. தானி (9: 21) | 4. ஓசியா (4 : 6) | 5. தானி (8 : 2)
6. ஓசியா(1:1) | 7. தானி (8 : 20) | 8. தானி (9 : 26)
9. ஓசியா (5 : 5, 6) | 10. தானி (12 :7)




**Jan'2020**
**மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திரு . ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. எபென் A. பிரசாத்

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. ஷெரின் தினேஷன்

செல்வி. ஜெரின் மகதலேன்

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்

| பிறந்தநாள் ஆசரிப்போர் **Birthday Celebrants** | |
|---|---|
| 2-Feb | Baby. Jessica D/o Mr. Ashok Kumar |
| 2-Feb | Mr. Naveen S/o Mr. Shankaran |
| 12-Feb | Rev. M. Christopher Rajendran |
| 13-Feb | Mr. S. Jensin Bose S/o Mr. Selva Kumar |
| 14-Feb | Ms. Jayne John Joseph D/o Mr. John Joseph |
| 17-Feb | Mr. Sunith Samuel |
| 20-Feb | Baby. Liana Ann D/o Mr. Sunith Samuel |
| 20-Feb | Mstr. Jason Eric S/o Mr. Daniel |
| 22-Feb | Mrs. Jeyantha W/o Mr. Belfer John |
| 25-Feb | Dr. Giftus Marvin S/o Mr. M. Nesamony |
| 25-Feb | Ms. Mukila D/o Mr. Ravi Chandran |
| 25-Feb | Mrs. Babitha Babu W/o Mr. Babu Abraham |
| 25-Feb | Baby. Hazel Hartlyn D/o Mr. Herchil Harsish |
| 26-Feb | Mr. Lokesh S/o Mr. Shankaran |
| | |

| திருமணநாள் ஆசரிப்போர் / **Wedding Anniversary** | |
|---|---|
| 11-Feb | Mr. Justin Oliver & Mrs. Sahila Grace Justin |
| 24-Feb | Mr. A. Ravichandran & Mrs. R. Muneeswari |

**என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.**
**நீதிமொழிகள் 9:11**

**On behalf of**

## CSI Tamil Parish

**H A P P Y**



# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 090 | Mobile no: 055 526 3351 |
|---|---|
| Dr. Shino P Mathew (Head) | |
| Dr. Shelly Kurian (Wife) | |
| Mstr. Joel Shino Mathew (Son)<br>Ms. Jaime Shino Mathew (Daughter) | |
| Location in India:<br>Vanchiyur, Trivandrum<br>Kerala | |

| CSI Tamil Parish Family No: 091 | Mobile no: 055 825 6072 |
|---|---|
| Mr. Bhaskar Rajaram (Head) |  |
| Mrs. Angelin Bhaskar (Wife) | |
| Mrs. Jebamani Joseph<br>(Mother in Law) | |
| Location in India:<br>Ranipet, Ranipet District,<br>Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 092 | Mobile no: 058 827 5689 |
|---|---|
| Mr. Jeremiah Kingston (Head) |  |
| Mrs. Olivia Sherin (Wife) | |
| Location in India:<br>Palayamkotai, Tirunelveli,<br>Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 093 | Mobile no: 055 960 7137 |
|---|---|
| Mr. Balaji Ramaiyan (Head) |  |
| Mrs. Roselin Tamilselvi (Wife) | |
| Mstr. Regan Shan (Son) | |
| Location in India:<br>Gudiyattam Town, Vellore Dist.,<br>Tamilnadu | |

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர் குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |

**இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**
**ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.**

This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.

## DAILY BIBLE READING February 2020
### "Your word is a lamp to my feet and light for my path"

### FEBRUARY

| | | |
|---|---|---|
| 1 Leviticus 14 – 15 | 11 Numbers 8 – 10 | 21 Deuteronomy 1 – 2 |
| 2 Leviticus 16 – 18 | 12 Numbers 11 – 13 | 22 Deuteronomy 3 – 4 |
| 3 Leviticus 19 – 21 | 13 Numbers 14 – 15 | 23 Deuteronomy 5 – 8 |
| 4 Leviticus 22 – 23 | 14 Numbers 16 – 18 | 24 Deuteronomy 9 – 11 |
| 5 Leviticus 24 – 25 | 15 Numbers 19 – 21 | 25 Deuteronomy 12 – 15 |
| 6 Leviticus 26 – 27 | 16 Numbers 22 – 24 | 26 Deuteronomy 16 – 18 |
| 7 Numbers 1 – 2 | 17 Numbers 25 – 26 | 27 Deuteronomy 19 – 20 |
| 8 Numbers 3 – 4 | 18 Numbers 27 – 29 | 28 Deuteronomy 21 – 23 |
| 9 Numbers 5 – 6 | 19 Numbers 30 – 32 | 29 Deuteronomy 24 – 25 |
| 10 Numbers 7 | 20 Numbers 33 – 36 | |

# CHURCH OF SOUTH INDIA
# NEW LEADERSHIP OF SYNOD



Most. Rev. Dharmaraj Rasalam
Moderator



Rt. Rev. Prof Dr. Reuben Mark
Dy. Moderator



Adv. Fernandez Ratnarajah
General Secretary



Prof. Dr. B Vimal Sukumar
Hon. Treasurer

## New year cake cutting ceremony 2020








Strictly For Private Circulation
Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparishalain.org